B

# அரையாண்டுப் பொதுத் தேர்வு – 2023

## பன்னிரெண்டாம் வகுப்பு

நேரம்: 3.00 மணி தமிழ் மதிப்பெண்கள்:90

பகுதி – I

14x1=14

அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.

1. "மீண்டுமந்தப் பழமைநலம் புதுக்குதற்கு" – கவிஞர் குறிப்பிடும் பழமை நலம்
   அ) பாண்டியரின் சங்கத்தில் கொலுவிருந்தது
   ஆ) பொதிகையில் தோன்றியது
   இ) வள்ளல்களைத் தந்தது
   i) அ மட்டும் சரி (ii) அ, இ, இரண்டும் தவறு
   (iii) இ மட்டும் சரி (iv) அ, இ, இரண்டும் சரி
2. வெள்ளச் சமவெளிகள் அழியக் காரணம்
   அ) பருவநிலை மாற்றம் ஆ) மணல் அள்ளுதல்
   இ) பாறைகள் இல்லாமை ஈ) நிலத்தடிநீர் உறிஞ்சப்படுதல்
3. வல்லினம் மிகும், மிகாத் தொடர்களின் பொருளறிந்து பொருத்துக.
   அ) பாலை பாடினான் – 1. தேரை என்னும் உயிரினத்தைப் பார்த்தான்
   ஆ) பாலைப் பாடினான் – 2. தேரினைப் பார்த்தான்
   இ) தேரை பார்த்தான் – 3. பாலினைப் பாடினான்
   ஈ) தேரைப் பார்த்தான் – 4. பாலைத் திணை பாடினான்
   அ) 4,1,3,2 ஆ) 2,3,1,4 இ) 4,3,1,2 ஈ) 2,4,1,3
4. "விண்ணோறு விண்வெளியில் இயங்குகின்ற வெண்மதியும் செங்கதிரும் முகிலும் வேறு" – இத்தொர் தரும் முழுமையான பொருள்.
   அ) விண்ணும் வெண்மதியும் வேறு வேறு
   ஆ) விண்வெளியும் செங்கதிரும் வேறு வேறு
   இ) வெண்மதியும் முகிலும் வேறு வேறு
   ஈ) விண், விண்வெளியில் உள்ள வெண்மதி, செங்கதிர், முகில் அனைத்தும் வேறு வேறு
5. 'உள்ளொன்று வைத்துப் புறம்பொன்று பேசுவார்' – இத்தொடர் உணர்த்தும் பண்பு
   அ) நேர்மறைப் பண்பு ஆ) எதிர்மறைப் பண்பு
   இ) முரண்பண்பு ஈ) இவை அனைத்தும்
6. வேறுபட்டதைக் குறிப்பிடுக.
   அ) அண்மைக் காட்சித் துணிப்பு ஆ) சேய்மைக் காட்சித் துணிப்பு
   இ) நடுக் காட்சித் துணிப்பு ஈ) காட்சி மறைவு
7. அல்லல் படுப்பதூஉம் இல் – எவரோடு பழகினால்?
   அ) வாள்போல் பகைவர் ஆ) மெய்பொருள் காண்பவர்
   இ) எண்ணியாங்கு எய்துபவர் ஈ) தீயினத்தார்
8. முச்சந்தி இலக்கியம் என்பது
   கூற்று 1 : கதை வடிவிலான வடிவம் உடையது
   கூற்று 2 : பெரிய எழுத்துப் புத்தகம் என்று அழைக்கப்படுவது
   அ) கூற்று 1 சரி, கூற்று 2 தவறு ஆ) கூற்று 1, 2 சரி
   இ) கூற்று 1, 2 தவறு ஈ) கூற்று 1 தவறு, கூற்று 2 சரி

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

9. மறைத்துச் சொல்லையும் விளக்கிச் சொல்லையும் அழுத்திச் சொல்லையும் பயன்படுத்தும் இலக்கிய உத்தி எது ?

அ) குறியீடு ஆ) படிமம் இ) அங்கதம் ஈ) தொன்மம்

10. சிறுபாணாற்றுப்படை காட்டும் பாட்டுடைத் தலைவனின் இன்றைய நிலப்பகுதி

அ) உதகமண்டலம் ஆ) விழுப்புரம் இ) திண்டிவனம் ஈ) தருமபுரி

11. "மறியிடைப் படுத்த மான்பிணை போல" – இவ் ஐங்குறுநூற்றுச் செய்யுளடி உணர்த்தும் குடும்ப அமைப்பு

அ) தந்தைவழிக் குடும்பம் ஆ) தாய்வழிக் குடும்பம்
இ) தனிக்குடும்பம் ஈ) விரிந்த குடும்பம்

12. இரண்டுமுறை ஒருவன் ஒரே நதியில் இறங்க முடியாது – என்னும் தொடர் உணர்த்தும் பொருள்

அ) ஒவ்வொரு நாளும் சூழல் புதிது ஆ) நீந்துவது கடினம்
இ) முன் அனுபவம் பயன் தரும் ஈ) புத்தக அறிவே பயன்படும்

13. தமிழ்நாட்டுக் கல்வெட்டுகள் தமிழ்மொழியில்தான் எழுதப்பட்டுள்ளன என்று நிறுவிய ஆராய்ச்சியாளர்

அ) ஐராவதம் மகாதேவன் ஆ) நீலகண்ட சாஸ்திரி
இ) மயிலை சீனி வேங்கடசாமி ஈ) கே.வி.சுப்பிரமணியனார்

14. உரிமைத்தாகம் என்னும் கதையை எழுதியவர் ______

அ) உத்தம சோழன் ஆ) பூமணி இ) ஐராவதம் மகாதேவன் ஈ) தோப்பில் முகமது மீரான்

## பகுதி II

### பிரிவு – 1

**எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடை தருக** 3x

15. கவிஞர் சிற்பி எவற்றை விரும்பி பாட, தமிழின் துணை வேண்டும் என்கிறார் ?
16. வசனம் – கவிதை வேறுபாடு தருக.
17. ஒருமுக எழினி, பொருமுக எழினி – குறிப்பு தருக.
18. அறிவுடை வேந்தனின் நெறி குறித்து, பிசிராந்தையார் கூறுவன யாவை ?

### பிரிவு – 2

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை தருக**

19. "ஆளுக்கொரு மரம் வளர்ப்போம்" என்னும் முழக்கத் தொடர் வாயிலாக எவற்றை வலியுறுத்துவாய் ?
20. புக்கில், தன்மனை – சிறு குறிப்பு எழுதுக.
21. பருவத்தே பயிர் செய் – நேர மேலாண்மையோடு பொருத்தி எழுதுக.

### பிரிவு – 3

**எவையேனும் ஏழு வினாக்களுக்கு விடை தருக**

22. விடியல், வனப்பு – இரு சொற்களையும் ஒருங்கிணைத்துத் தொடர் அமைக்க.
23. தொன்மம் பொருள் யாது ?
24. ஏதேனும் ஒன்றனுக்குப் பகுபத உறுப்பிலக்கணம் தருக

அ) அறுத்து ஆ) பேசுவார்

www.Padasalai.Net

www.Padasalai.Net www.TrbTnpsc.com



25. ஏதேனும் ஒன்றனுக்குப் புணர்ச்சி விதி தருக.
அ) அருங்கானம் ஆ) பூம்பாவை

26. மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக.
அலை, அளை, அழை

27. வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக.
(அ) நம் வாழ்க்கையின் தரம் நமது கவனத்தின் தரத்தை பொறுத்திருக்கிறது. புத்தம் படிக்கும் பொழுது கூர்ந்தக் கவனம் அறிவை பெறுவதற்கும் வளர்ப்பதற்குமான அடிப்படை தேவையாகும்.

28. கீழ்க்காணும் தொடர்களில் அடைப்புக்குள் உள்ள பெயர்ச்சொல்லைத் தொடர்களுக்கு ஏற்றவாறு மாற்றி எழுதுக.
(அ) கபிலன் திறமையானவன் என்று ______ (குமரன்) தெரியும்.
(ஆ) உங்களுக்கு ______ (யார்) நன்மை என நினைக்கிறீர்கள்.

29. தொடரில் இடம்பெற்றுள்ள மரபுப் பிழைகளை நீக்கி எழுதுக.
அ) முருகன் சோறு சாப்பிட்டுப் பால் குடித்தான்.
ஆ) பனைமட்டையில் கூரை வைத்திருந்தனர்

30. பிறமொழிச் சொற்களைத் தமிழாக்கம் செய்க.
அ) Debit Card ஆ) Bibliography

## பகுதி III

### பிரிவு – 1

**ஐந்து அல்லது ஆறு வரிகளில் எவையேனும் இரண்டனுக்கு மட்டும் விடையளிக்கவும் 2x4=8**

31. "செம்பரிதி மலைமேட்டில் தலையைச் சாய்ப்பான் செந்நிறத்துப் பூக்காடாம் வான மெல்லாம்" – தொடர் வெளிப்படுத்தும் காட்சி நயத்தை விளக்குக.

32. "ஈசன் மகன் நின்றனர் ஓர் ஏழையென ஓர்மின்" – இடஞ்சுட்டிப் பொருள் விளக்கம் தருக.

33. நாட்டிய அரங்கின் அமைப்பை இளங்கோவடிகள் காட்சிப்படுத்தும் பாங்கு குறித்து உங்கள் கருத்தை எழுதுக ?

34. சினத்தால் வரும் கேட்டினைக் கூறுக.

### பிரிவு – 2

**எவையேனும் இரண்டனுக்கு மட்டும் விடையளிக்கவும் 2x4=**

35. பேரிடர் மேலாண்மை ஆணையம் – விளக்கம் தருக.

36. திரைப்படத்தின் காட்சி ஆற்றலை எடுத்துக்காட்டுடன் புலப்படுத்துக.

37. மணலில் எழுதியது முதல் தற்காலம் வரை எழுதும் முறையில் ஏற்பட்டுள்ள மாற்றங்களைத் தொகுத்துரைக்க ?

38. பண்டைய விரிந்த குடும்பத்தின் தொடர்ச்சியே இன்றைய கூட்டுக் குடும்பம் – விளக்குக.

### பிரிவு – 3

**எவையேனும் மூன்றனுக்கு மட்டும் விடையளிக்கவும் 3x4**

39. (அ) ஏகதேச உருவக அணியை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

அல்லது

(ஆ) அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது – இக்குறட்பாவில் பயின்று வரும் அணியை விளக்

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



40. ஏற்புடைய நான்கு நயங்களை எழுதுக.

முச்சங்கம் கூட்டி
　　முதுபுலவர் தமைக் கூட்டி
அச்சங்கத் துள்ளே
　　அளப்பரிய பொருள்கூட்டி
சொற்சங்க மாக
　　சுவைமிகுந்த கவிகூட்டி
அற்புதங்க ளெல்லாம்
　　அமைத்த பெருமாட்டி!

– கண்ணதாசன்

41. தமிழாக்கம் தருக
1. Learning is a treasure that will follow its owner every where
2. A new Language is a new life
3. If you want people to understand you speak their language
4. Knowledge of languages is the doorway to wisdom

42. பின்வரும் பழமொழியை வாழ்க்கை நிகழ்வில் அமைத்து எழுதுக.
(அ) யானைக்கும் அடி சறுக்கும்
(அல்லது)
(ஆ) எறும்பு ஊற கல்லும் தேயும்

43. (அ) வாகைத் திணையைச் சான்றுடன் நிறுவுக.
(அல்லது)
(ஆ) பரிசில் துறையைச் சான்றுடன் விளக்குக.

## பகுதி – IV

3x6=18

44. அ) பண்பின் படிமமாகப் படைக்கப்பட்ட இராமன், பிற உயிர்களுடன் கொண்டிருந்த உறவு நிலையைப் பாடப்பகுதி வழி நிறுவுக.
(அல்லது)
ஆ) எளிய மக்களின் வலிகளை நாட்டுப்புற இலக்கிய வடிவங்களே முழுமையாகப் பிரதிபலிக்கின்றன – நிறுவுக.

45. அ) கவிதையின் நடையைக் கட்டமைக்கும் அழகியல் கூறுகளை எடுத்துக்காட்டி விளக்குக.
(அல்லது)
ஆ) மயிலையார் ஓர் ஆராய்ச்சிப் பேரறிஞர் என்னும் கூற்றினைச் சான்றுடன் நிறுவுக.

46. அ) உரிமைத்தாகம் கதையில் சகோதரர்கள் இருவரும் ஒன்றிணையாமல் இருந்திருந்தால், கதையைத் தொடர்ந்து எழுதி முடிக்க.
(அல்லது)
ஆ) சங்ககால வரலாற்றை அறிந்து கொள்ள புகளூர்க் கல்வெட்டு எவ்வகையில் துணைபுரிகிறது.

## பகுதி – V

4+2=6

47. அ) "காய்நெல் அறுத்து" எனத் தொடங்கும் புறநானூற்றுப் பாடலை அடிபிறழாமல் எழுதுக.
ஆ) "அரண்" என முடியும் குறளை அடிபிறழாமல் எழுதுக.

***/***

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

www.Padasalai.Net